# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 19.08.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:** உணமையான துஆவை செய்வதற்கும் துஆவின் தேவை இருக்கின்றது.

**பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்:** ஸலாத் மற்றும் தொழுகை ஆகியவற்றிற்கு இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்று நான் நினைத்துப் பார்த்தேன். நபிமொழியில் ஸலாத் துஆவாகும் என வந்துள்ளது. தொழுகை இறைவணக்கத்தின் சத்து ஆகும்.

**பிறகு கூறுகின்றார்கள்:** இந்த தொழுகை எப்படிப்பட்டதென்றால் இதனால் உலகமும் சரியாகி விடும்; மார்க்கமும் சரியாகி விடும்.

தொழுகை எப்படிப்பட்டதென்றால் அதை நிறைவேற்றுவதன் மூலம் ஒவ்வொரு தீய செயலிலிருந்தும், வெட்கங்கெட்ட செயலிலிருந்தும் அது மனிதனைத் தடுக்கின்றது. இத்தகைய தொழுகையைத் தொழுவது ஒருவரது சக்திக்கு உட்பட்டதல்ல.

அதாவது தீய செயலிலிருந்தும், வெட்கங்கெட்ட செயலிலிருந்தும் தடுக்கின்ற தொழுகையைத் தொழுவது ஒருவரது சுய சக்திக்கு உட்பட்ட ஒன்றல்ல. இந்த வழிமுறை இறைவனது உதவி இல்லாமல் ஒருவரால் பெற்றுக் கொள்ள முடியாது.

நமது இறைவணக்கங்களும் துஆக்களும் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி தான் இந்த எல்லா விஷயங்களும் நமக்கு வழிகாட்டக்கூடியவையாக இருக்கின்றன.

துஆ செய்வதற்கு நான் என்ன வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும்? இப்படிப்பட்ட இறைவணக்கங்கள், துஆக்கள் மூலமாக எத்தகு விளைவுகள் வெளிப்பட வேண்டும்? இந்த இறைவணக்கங்கள், துஆக்கள், தொழுகைகள் ஆகியவை எவ்வாறு இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தகுதியைப் பெற முடியும்? இந்த எல்லா விஷயங்களையும் புரிந்து மனிதன் இதுபற்றிய ஞானத்தைப் பெற்று விட்டால் இறைவணக்கம் தான் மனிதப் படைப்பின் நோக்கமாக இருக்கின்றது என்பதையும் இந்த நோக்கத்தை அடைவதன் மூலமாகத்தான் அவனது உலகமும் மறுமையும் சரியாகும் என்பதையும் அவன் புரிந்து கொள்வான். பிறகு மற்ற எல்லா விஷயங்களையும் பொருள்களையும் விட்டு விட்டு மனிதன் இந்த உயர்வான நோக்கத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போல துஆ செய்வதற்கும் துஆ தேவைப்படுகிறது. படைப்பின் நோக்கத்தை இறைவனது உதவியும், ஆதரவும் இல்லாமல் நாம் அடைய முடியாது. நமது முயற்சிகளால் மட்டும் நாம் நமது படைப்பின் நோக்கத்தை அடைய முடியாது. அல்லாஹ் தனது அடியார்கள் மீது எல்லையற்ற கருணை காட்டுபவனாக இருக்கின்றான். அவன் திருக்குர்ஆனின் முதல் சூராவிலேயே இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற துஆவை நமக்கு கற்றுத் தந்துள்ளான். கடமையான தொழுகைகளிலும், சுன்னத்தான தொழுகைகளிலும் நஃபில் தொழுகைகளிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் இந்த துஆவைச் செய்வதை அவசியமானதாக ஆக்கியுள்ளான்.

அல்லாஹ்வே! நாங்கள் உன்னையே வணங்குகின்றோம். உன்னையே வணங்க விரும்புகிறோம். ஆனால் உன்னுடைய உதவி எங்களுக்கு கிடைக்காத வரை நாங்கள் இதற்கான உரிமையைச் செலுத்த

முடியாது என நாம் இந்த துஆவில் கூறுகின்றோம். உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவரும் பணிவான முறையீடாக ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்விடம் இந்த துஆவை செய்யும் போது அல்லாஹ் அவருக்கு அதற்கான நல்வாய்ப்பையும் வழங்குகின்றான்.

பிறகு இதுவும் தனது அடியார் மீது அல்லாஹ் செய்கின்ற பேருபகாரமாகும். அதாவது ஒவ்வொரு வருடத்திலும் ரமலான் மாதத்தைக் கொண்டு வந்து அல்லாஹ் நான் அருகில் இருக்கின்றேன் என்ற அறிவிப்பைச் செய்கின்றான். நான் ஷய்த்தானைக் கட்டிப் போட்டு விட்டேன். தூய உள்ளத்துடன் என் பக்கம் வருகின்ற ஒவ்வொரு அடியாருக்கும் நான் உதவி செய்யத் தயாராக இருக்கின்றேன். அவர்களுக்கு உதவி செய்கின்றேன் என்ற அறிவிப்பை இறைவன் செய்கின்றான். அவர்கள் என் மீது முழுமையான நம்பிக்கை வைத்து எனது கட்டளைக்கேற்ப செயல்படுகின்றார்கள். வருங்காலத்தில் தூய உள்ளத்துடன் என்னை வணங்குவதாகவும் எனது தூய அடியார்களாக இருப்பதாகவும் அவர்கள் என்னிடம் வாக்குறுதி செய்கின்றார்கள். பிறகு நான் எனது அத்தகு அடியார்களின் துஆக்களைக் கேட்டு அவற்றை ஏற்றுக் கொள்கின்றேன் என்று இறைவன் அறிவிப்பு செய்கின்றான். எனவே எங்காவது குறை இருக்கின்றது என்றால் அடியார்களாகிய நம்மிடத்தில்தான் குறை இருக்கின்றது. இறைவனது அருள்கள், உதவிகள் ஆகியவற்றில் எந்த குறைவும் இல்லை. பிறகு இந்தக் காலத்தில் அல்லாஹ் தனது தூதரை நமக்கு உதவி செய்வதற்காக அனுப்பியுள்ளான் அவர்கள் முழுமை பெற்ற இறை அடியாராகத் திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக வந்துள்ளார்கள். அவர்கள் மீண்டும் நம்மை இறைவனை சந்திக்க வைத்து அவனது அடியாராக மாறி அவனை வணங்குவதில் தனித்தன்மையை வெளிப்படுத்திக் காட்டி அவனது உதவியை பெறக்கூடியவராக ஆவதற்கான வழிமுறைகளை நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றுக்கள், அன்னார் நமக்கு கூறியுள்ள கட்டளைகள் ஆகியவற்றின் ஒளியில் இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்ற வசனத்தை சற்று விளக்கமாகக் கூறவுள்ளேன்.

எந்த அளவுக்கு நுட்பமாகவும் ஆழமாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற வசனத்தின் பொருளை நமக்கு புரிய வைத்துள்ளார்கள் என்றால் நாம் அதைப் புரிந்து அதை நமது வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஆக்குபவர்களாக ஆகிவிட்டால், மேலும் அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்கி விட்டால் பிறகு நாம் இறையடியாராக இருப்பதற்குரிய உரிமையைச் செலுத்துவதற்கு முயற்சி செய்பவர்களாக ஆகிவிடுவோம். இறைவணக்கத்தில் உயர்வான தரத்தை அடைந்து பணிவோடு இறைவன் முன்னால் நாம் குனியும் போதுதான் நாம் இதற்கான நல்வாய்ப்பை பெற முடியும். அப்போதுதான் நாம் ரஹ்மானின் அடியார்கள் என அழைக்கப்படுபவர்களில் ஒருவராக ஆக முடியும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஈமானில் வலுவான நிலையை அடைந்தவர்களாக ஆக முடியும். அல்லது ஒரு நம்பிக்கையாளரிடம் நாம் எதிர்பார்க்கும் அந்த உயர்நிலையை அடைய முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள இறை ஞானத்தின் கருவூலங்களிலிருந்து சில ரத்தினங்களை நான் உங்கள் முன்னால் எடுத்து வைக்கின்றேன். இதனை அன்னார் தமது நூல்கள் மூலம் நமக்கு வழங்கியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் இய்யாக்க நஃபுது என்ற சொற்றொடரை இய்யாக்க நஸ்தயீன் என்ற சொற்றொடருக்கு முன்னதாக வைத்துள்ளான். இதில் மனிதன் தனக்குரிய நற்பாக்கியங்களை கேட்பதற்கு முன்னதாகவே ரஹ்மானான அந்த இறைவன் தன் தரப்பிலிருந்தும் சுயமாக வழங்கியுள்ள அருள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது மனிதன் தனது இறைவனுக்கு நன்றி செலுத்தியவாறு இறைவா நான் உனது அருள்களுக்காக உனக்கு நன்றி செலுத்துகின்றேன். எனது துஆவை எனது விண்ணப்பத்தை எனது செயலை எனது முயற்சியை ஏற்றுக் கொண்டு என் மீது அருள் செய்தமைக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். உனது படைத்துக்

காத்தோம்பும் பண்பும் எல்லாருக்கும் அருள்பாலிக்கும் ரஹ்மான் என்ற பண்பும் கேட்பவர் உன்னிடம் எதையாவது கேட்பதற்கு முன்னதாகவே செயல்பட்டுள்ளது. நான் உன்னிடம் உதவி கோருவதற்கு முன்னதாகவே நீ எனக்கு பலவற்றையும் வழங்கி விட்டாய். ஆகவே நான் மீண்டும் உன்னிடமே எல்லா வகையான ஆற்றல், மகிழ்ச்சி, நன்மை, வெற்றி ஆகியவற்றை வேண்டுகிறேன். உன்னிடம் விண்ணப்பிப்பதன் மூலமும் உதவி கேட்பதன் மூலமும் துஆ கேட்பதன் மூலமும் மட்டுமே கிடைக்கின்ற அந்த உயர்வான நோக்கங்களைப் பெறுவதற்காக நான் உன்னிடம் வேண்டுகின்றேன். நீயே சிறப்பாக வழங்கக்கூடியவனாக இருக்கின்றாய் என்று கூறுகின்றான்.

தனது ரஹ்மான் என்ற பண்பின் விளைவாக அல்லாஹ் தன் மீது செய்துள்ள அருள்களை அடியான் நினைவு கூர்ந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆகும்போது இதுதான் இறைவனை வணங்குவதற்கும் அவனது உண்மையான அடியாராக ஆவதற்கும் உள்ள முதல் அடியாக அமையும். இந்த உயர்வான தகுதி பற்றிய அறிவு ஒரு அடியானுக்கு கிடைத்து விட்டால் பிறகு இறைவணக்கத்தில் முன்னேறுவதற்கு அவன் முயற்சிகளை செய்து கொண்டிருப்பான். பிறகு இறைவா! நீ உனது அடியாராக ஆவதற்கான உயர் தரத்தைப் பெறுவதற்காக வைத்துள்ள பல படித்தரங்களையும் பெற நான் விரும்புகின்றேன். உனது எல்லா வகையான அருட்கொடைகளிலிருந்தும் நான் பலன்பெற விரும்புகின்றேன். எனது பௌதீக, ஆன்மீக முன்னேற்றத்திற்கு மேலும் தேவையான அனைத்தையும் நான் விரும்புகின்றேன். ஆனால் இவையெல்லாம் உனது உதவி இல்லாமல் எனக்கு கிடைக்க முடியாது. எனவே நீ எனக்கு உதவி செய்வாயாக! என் அடியான் தனது இறைவனிடம் கேட்கின்றான். பிறகு இறைவனின் உதவியின் கதவுகள் அவனுக்காக திறக்கின்றது. முன்னேற்றத்தின் இலக்குகளை அவன் கடந்து செல்கின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவது என்னவென்றால் அல்லாஹ் தனது ரஹ்மான் என்ற பண்பின் விளைவாக அருட்கொடைகளை வழங்கும் போது அதற்கு அடியான் நன்றி செலுத்துபவனாக ஆகும்போதுதான் அவனுக்கு இறை வணக்கத்தின் பக்கமும் கவனம் ஏற்படும். இந்த அடிப்படையான கருத்தை கண் முன்னால் வைத்தவாறு நாம் இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்ற துஆவை செய்ய வேண்டும்.

இந்த துஆவின் பக்கம் அல்லாஹ் ஏன் நமக்கு கவனமூட்டியுள்ளான் என்ற விஷயத்தை விளக்கிக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனங்களில் உமக்கு வழங்கப்பட்டுள்ள அந்த அருள்களுக்கு நன்றி செலுத்துவதற்கு ஆர்வமூட்டப்பட்டுள்ளது. எந்தப் பொருள்களைப் பெற உமக்கு ஆசை இருக்கின்றதோ அவற்றைப் பெற பொறுமையுடன் துஆ செய்வதற்கும் மிக உயர்வான பொருளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆர்வத்தை அதிகரிப்பதற்கும் இந்த துஆவில் ஆர்வமூட்டப்பட்டுள்ளது. அதன் மூலமாக நீங்களும் நிரந்தரமாக நன்றி செலுத்துபவர்கள், நிரந்தரமாக பொறுமையைக் கடைபிடிப்பவர்கள் ஆகியோருடன் இணைந்து விட வேண்டும். பிறகு அடியான் தன்னிடம் தைரியமும் ஆற்றலும் இருக்கின்றது என்று கருதுபவரை மறுப்பதன் பக்கம் இந்த வசனம் அவனுக்கு ஆர்வமூட்டுகின்றது. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு எப்போதும் அவனிடமே கேட்பது, செய்வது, பணிவாக மன்றாடுவது, அல்லாஹ்வைப் புகழ்ந்தவாறு அல்லாஹ் சுப்ஹானஹுத் தஆலாவிற்கு முன்பாக தன்னை அவனிடமே ஒப்படைப்பது ஆகியவற்றின் பக்கம் இந்த வசனம் ஆர்வமூட்டுகிறது. அச்சத்துடனும், நம்பிக்கையுடனும் தாயின் மடியில் பால் அருந்துகின்ற அந்த பச்சிளங் குழந்தையைப் போல அடியான் தானும் இறைவன் முன்னால் தேவையுடையவனாக இருப்பதை உணர்வதன் பக்கம் இந்த வசனம் ஆர்வமூட்டுகின்றது. இங்கு முதலாவதாக இறைவனுக்கு நன்றி செலுத்துவதன் பக்கம் இந்த வசனத்தில் ஆர்வமூட்டப்பட்டுள்ளது. மனிதன் நன்றி செலுத்தக்கூடிய அடியானாக இருக்க வேண்டும்.

அடுத்து பொறுமை, துஆ ஆகியவற்றின் பக்கம் ஆர்வமூட்டப்பட்டுள்ளது. பொறுமையின் காரணமாகவும் தொடர்ச்சியாகவும் நிரந்தரமாகவும் துஆ செய்வதில் ஈடுபடுவதன் மூலமாகவும் நிரந்தரமாக

நன்றி செலுத்துகின்ற நிரந்தரமாக பொறுமையை கடைபிடிக்கின்றவர்களுடன் நீங்கள் இணைந்து விடலாம். பிறகு அப்படிப்பட்டவர்களுக்கு அல்லாஹ் தனது அருட்கொடைகளை வழங்குகின்றான். தன்னை ஒன்றுமற்றவனாக கருதுவதன் பக்கமும் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாகவும் அதிபதியாகவும் அல்லாஹ் ஆவான் என கருதுவதன் பக்கமும் இந்த வசனத்தில் ஆர்வமூட்டப்பட்டுள்ளது. எனவே இந்த விஷயங்கள் மனிதனின் மூளையில் இருக்க வேண்டும். இதற்காக அடியான் தன்னை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். அல்லாஹ்வுடன் உள்ள தொடர்புக்கு எதிராக அமைகின்ற எல்லாவிதமான உலகத் தொடர்புகள், உறவுகள் ஆகியவற்றின் தொடர்புகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். அந்த தொடர்புகள் இல்லாமல் ஆகிவிட வேண்டும்.

தனது கைகளிலுள்ள ஆற்றல் மீதும் அந்த அடியானுக்கு நம்பிக்கை இருக்காது. தனது நஃப்ஸ் மற்றும் அதன் ஆற்றல் மீதும் அவனுக்கு நம்பிக்கை இருக்காது. உலகத் தொடர்புகள் அதன் ஆற்றல்கள் ஆகியவற்றின் மீதும் அவனுக்கு நம்பிக்கை இருக்காது. இப்படிப்பட்ட ஒரு நிலையை மனிதன் அடையும் போதுதான் அவனிடத்திலிருந்தும் இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்ற உண்மையான துஆ வெளிவரும்.

துஆ செய்கின்ற ஒரு மனிதன் தனது பலவீனங்களை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்பதற்கான உரிமையை செலுத்த முடியும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவ்வாறே இந்த வசனங்களில் நாம் மிகவும் பலவீனமானவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதன் பக்கம் ஆர்வமூட்டபட்டுள்ளது. நீ வழங்கியுள்ள தவ்ஃபீக் இல்லாமல் நாங்கள் உன்னை வணங் முடியாது. நாங்கள் உனது உதவியைக் கொண்டே பணியைச் செய்கின்றோம். உனது உதவியைக் கொண்டே அசைகின்றோம். மரணமடைந்து விட்ட தனது குழந்தையைப் பற்றிய துக்கத்தில் உருகுகின்ற அந்தப் பெண்ணைப் போன்றும் அன்பின் நெருப்பில் எரிந்து கொண்டிருக்கின்ற காதலர்களை போன்றும் நாங்கள் உன் பக்கம் ஓடி வருகின்றோம் என்றே அடியான் இறைவனிடம் கூறுகின்றான்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த வசனத்தில் தற்பெருமையையும், அகங்காரத்தையும் கைவிடுவதற்கு ஆர்வமூட்டப்பட்டுள்ளது. விஷயங்கள் சீர்குலைந்து போகும் போதும் துன்பங்கள் சூழ்ந்து கொள்ளும் போதும் அல்லாஹ்விடமிருந்து மட்டும் கிடைக்கும் ஆற்றல், சக்தி ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைப்பதன் பக்கமும், பணிவான இயல்புள்ள மக்களுடன் இணைந்து விடுவதன் பக்கமும் இந்த வசனத்தில் ஆர்வமூட்டப்பட்டுள்ளது. அதாவது இறைவன் என்னுடைய அடியார்களே! நீங்கள் உங்களை மரணித்தவர்களைப் போன்று கருதுங்கள். ஒவ்வொரு நேரத்திலும் அல்லாஹ்விடமிருந்து ஆற்றலைப் பெறுங்கள் என்று இறைவன் நம்மிடம் கூறுகின்றான். எனவே உங்களில் எந்த இளைஞரும் தனது ஆற்றல் மீது பெருமை கொள்ள வேண்டாம். உங்களில் எந்த முதியவரும் தனது கைத்தடியின் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம். அவ்வாறே அறிவுள்ள எவரும் தனது அறிவின் மீது பெருமை கொள்ள வேண்டாம். அவ்வாறே மார்க்கச் சட்டத்தை அறிந்தவர் தனது அறிவின் உறுதி, தனது சிறந்த புரியும் தன்மை ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம். மேலும் இல்ஹாமை பெறுகின்ற எவரும் தனது இல்ஹாம் அல்லது கஷ்ஃப், தனது தூய்மையான துஆ ஆகியவற்றை சார்ந்திருக்கவும் வேண்டாம். ஏனென்றால் அல்லாஹ் எதை விரும்புகின்றானோ அதை செய்கின்றான். எவரை விரட்ட விரும்புகின்றானோ அவரை விரட்டி விடுகின்றான். எவரை விரும்புகின்றானோ அவரை தனது குறிப்பான அடியார்களில் நுழையச் செய்து விடுகின்றான்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இய்யாக்க நஸ்தயீன் என்பதில் நஃப்ஸே அம்மாரா அதாவது தீமையைத் தூண்டக்கூடிய ஆன்மாவின் தீமையின் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக பயணம் செய்கின்றவரை தன் மீது அமர இடம்கொடுக்காமல் இருக்கும் மிரண்டு ஓடுகின்ற ஒட்டகத்தைப் போல நஃப்ஸே அம்மாராவின் தூண்டுதலின் விளைவாக மனிதன் நன்மைகளை விரும்புவதிலிருந்தும் விலகி ஓடுகின்றான். பாம்பைப் போல இந்த ஆன்மாவின் தீங்கும் மிக அதிகமாகி விட்டது. இந்த பாம்பு தான் கொட்டிய ஒவ்வொருவரையும் அழுகிப்போன எலும்புகள் போல ஆக்கி விட்டது. அந்த பாம்பு விஷத்தைக் கக்குவதை நீர் பார்க்கின்றீர். அல்லது தீமையைத் தூண்டக்கூடிய இந்த ஆன்மா ஒரு சிங்கம் போன்று இருக்கின்றது. ஒருமுறை தாக்கிவிட்டால் அது ஒருபோதும் பின்வாங்குவதில்லை. ஷய்த்தான்களை அழிக்கின்ற இந்த இறை உதவியை தவிர எந்த ஒரு சக்தி, ஆற்றல், வருமானம், சேமிப்பு ஆகியவை இதற்கெதிரில் நமக்கு உதவ முடியாது.

இந்த மேற்கோள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கராமத்துஸ்ஸாதிகீன் என்ற அரபி மொழியிலுள்ள நூலின் மொழியாக்கத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

துஆ செய்வதுடன் மனிதனுக்கு நஃப்ஸே அம்மாரா என்னை தீமையில் ஆழ்த்துவதன் பக்கம் கொண்டு செல்கிறது. இதிலிருந்து நான் தப்பிக்க வேண்டும் என்றால் எனது ஆற்றலாலும் முயற்சியாலும் தப்பிக்க முடியாது என்ற சிந்தனை இருக்க வேண்டும். அந்த சமயத்தில் அல்லாஹ் மட்டும்தான் மனிதனை ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முடியும். மேலும் நன்மைகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்க முடியும். அடியான் மிகுந்த பணிவுடன் அல்லாஹ்வின் முன்னால் நிற்க வேண்டும். மேலும் இறைவா! இன்று என்னை ஷய்த்தானிடமிருந்து காப்பாற்றக் கூடியவனாக நீ மட்டுமே இருக்கின்றாய் என்று துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான மக்கள் இவ்வளவு பணிவுடன் அல்லாஹ்விடம் கேட்டுக் கொண்டே இருக்கும் போது, மேலும் அவர்களே இறைவனின் உதவி இல்லாமல் வாழ முடியாது என்றால் பிறகு ஒரு சாதாரண மனிதன் எந்த அளவு இறைவனிடம் கேட்க வேண்டும். திருக்குர்ஆனில் அல்லாஹ் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் உதாரணத்தைக் கூறியுள்ளான். அவர்கள் நஃப்ஸே அம்மாராவிலிருந்து தப்பிப்பதற்காக துஆ செய்துள்ளார்கள்.

நான் எனது நஃப்ஸை குறித்து அது தவறுகளிலிருந்தம் விலகியிருந்தது என்று கூறமாட்டேன். ஏனென்றால் எந்த நஃப்ஸின் மீது அல்லாஹ் கருணை காட்டுகின்றானோ அந்த நஃப்ஸை தவிர மனித நஃப்ஸானது தீமையை அவனுக்கு கட்டளையிடுவதில் மிகவும் துணிச்சலுடன் செயல்படக்கூடியதாகும். எனது இறைவன் அதிகமாக மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான். (12:54)

இந்த துஆவும் இந்த சிந்தனையும்தான் பிறகு இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற துஆவிலிருந்து அருள்களை நமக்கு தருகின்றது. அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருப்பவர்களே இந்த துஆவை செய்யும் போது நாம் எந்த அளவு துஆ கேட்க வேண்டும் என்பதை மனிதன் சிந்திக்கும்போதுதான் அவன் இறைவனின் உண்மையான அடியாராக ஆக முடியும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நஃபுது என்பதை நஸ்தயீன் என்பதற்கு முன்னதாக வைத்திருப்பதில் இன்னும் பல நுட்பமான கருத்துக்கள் உள்ளன. அவற்றை நாம் திருக்குர்ஆனை ராகத்துடன் ஓதுபவர்களாக மட்டும் இல்லாமல் மீண்டும் மீண்டும் ஓதப்படுகின்ற சூரா ஃபாத்திஹாவின் ஆழமிக்க கருத்துக்களை அறிவதில் ஆர்வம் உள்ளவர்களுக்காக இங்கு எழுதுகின்றோம். அல்லாஹ் தனது அடியார்களுக்கு அவர்களுக்கு நற்பாக்கியத்தை வழங்குகின்ற ஒரு துஆவை கற்றுத் தந்துள்ளான். பிறகு என்னுடைய அடியார்களே! பணிவுடனும் எனது அடியான் என்ற நிலையிலும் என்னிடம் கேளுங்கள். எங்கள் இறைவா! இய்யாக்க நஃபுது நாங்கள் உன்னையே வணங்குகின்றோம். ஆனால் மிகுந்த துன்பத்துடனும் வெட்க உணர்வுடனும் கவலை

அளிக்கக்கூடிய எண்ணங்களுடனும் ஷய்த்தானிய சலனங்களுடனும் காய்ந்த சிந்தனைகளுடனும் அழிக்கக்கூடிய யூகங்களுடனும் இருளடைந்த எண்ணங்களுடனும் நாங்கள் அழுக்குகள் நிறைந்த தண்ணீரைப் போன்று இருக்கின்றோம். அல்லது நாங்கள் இரவு நேரங்களில் விறகுகளைத் தேடி அவற்றை ஒன்றுசேர்ப்பவர்கள் போன்று இருக்கின்றோம். நாங்கள் யூகங்களையே பின்பற்றுகின்றோம். எங்களுக்கு நிச்சய உறுதி கிடைக்கவில்லை.

எனவே இய்யாக்க நஃபுது என்று அடியான் கூறினாலும் இந்த எல்லா விஷயங்களும் அவனிடம் இருப்பதால் அவனுக்கு அதில் நிச்சய உறுதி இல்லை. கவலையளிக்கக்கூடிய நிலைமையில் அவன் உள்ளான்

எனவே அல்லாஹ் நமது நற்பாக்கியத்தை கருத்தில் கொண்டவாறு இப்படிப்பட்ட துஆவை நமக்கு கற்றுத் தந்துள்ளான். அதன் மூலமாக இறைவனது அடியாருக்குரிய உரிமையைச் செலுத்தியவாறு துஆ செய்வதன் பக்கம் ஆர்வமூட்டப்பட்டிருப்பதுடன் அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்ற வாக்குறுதியும் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஏனென்றால் இய்யாக்க நஃபுது என்பதற்கு பிறகு இய்யாக்க நஸ்தயீன் என்று கூறப்பட்டிருக்கிறது. இத்தகு வெட்க உணர்வு உருவாகும்போது மனிதன் தன்னை ஒன்றுமற்றவனாக கருதுகின்றான். அதனால், இய்யாக நஸ்தயீன் என்ற துஆவை செய்கின்றான். அப்போது அல்லாஹூ தஆலா அவனுக்கு உதவுவதற்காக வருகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனவே இதற்கு பிறகு இய்யாக நஸ்தயீன் என்று கூறுங்கள் என்று அல்லாஹூ தஆலா கூறுகின்றான். இப்படிப்பட்ட நிலை உருவான பிறகு இய்யாக நஸ்தயீன் நாங்கள் உன்னிடமே உதவி தேடுகின்றோம் என்று கூறுமாறு அல்லாஹ் கூறுகின்றான். மிகுந்த ஆர்வத்துடன், உள்ளத்தை ஒரு நிலைபடுத்தியவாறும், நிரம்பிய ஈமானுடனும் இருப்பதற்காகவும் ஆன்மீகமான முறையில் உனது கட்டளைகளுக்கு செவிசாய்க்கவும் ஆன்மீக மகிழ்ச்சியையும் ஒளியையும் பெறுவதற்கும் இறைஞானத்தின் நகைகளுடன் இறையின்பத்தின் ஆடைகளுடனும் உள்ளத்தை அழகாக்குவதற்கு உன்னிடமே நாங்கள் உதவி தேடுகின்றோம். அதன் மூலமாக உனது அருளுடன் நிச்சய உறுதியின் களத்தில் முன்னேறி செல்பவர்களாக நாங்கள் ஆகிவிடுவோம். மேலும் எங்களது நோக்கத்தின் இறுதி எல்லையை அதன் மூலமாக அடைந்து விடுவோம். உண்மை நிலையின் நதிகளில் நாங்கள் இறங்கி விடுவோம்.

எனவே இந்த துஆ ஆன்மீக முன்னேற்றத்திற்கும் இறைவசனத்தில் ஆர்வம் ஏற்படுவதற்கும் அதில் இன்பத்தை பெறுவதற்கும் முழுக்க முழுக்க அல்லாஹ்விற்காகவே ஆகிவிடுவதுடன் அவன் முன்னால் குனிந்தவாறு ஈமானில் முன்னேறுவதற்கும் காரணமாக ஆகிவிடுகின்றது.

இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தயீன் என்பதில் இறையடியார் பெறவேண்டிய உயர்ந்த தகுதி என்ன? என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் சொற்களான இய்யாக நஃபுது என்பதில் இன்னொன்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அல்லாஹ் இந்த வசனத்தில் தனது அடியார்கள் அவனுக்கு கட்டுபடுவதில் மிகுந்த தைரியத்துடனும், முயற்சியுடனும் செயல்படவேண்டும். லெப்பைக் என்று கூறியவாறு அவன் முன்னால் நிற்க வேண்டும். எங்கள் இறைவா! நாங்கள் முயற்சிகள் செய்வதிலும் உனது கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் உனது திருப்தியை விரும்புவதிலும் எவ்வித கவனக்குறைவும் எங்களிடம் இல்லை. ஆனால், நாங்கள் உன்னிடம்தான் உதவியை வேண்டுகிறோம். வெளிவே-ம் மற்றும் பகட்டு எங்களிடம் ஏற்படாமல் இருக்க உனது அடைக்கலத்தை நாங்கள் கேட்கின்றோம். நேர்வழி மற்றும் உனது திருப்தியின் பக்கம் கொண்டு செல்கின்ற அந்த தஃவ்பீக்கை உன்னிடமே வேண்டுகிறோம். மேலும் நாங்கள் உனக்கு கட்டுபடுவதிலும் நாங்கள் உறுதியான பாதங்களுடன்

நிற்கின்றோம். உனக்கு கட்டுப்பட்டு நடக்கும் அடியார்களில் ஒருவராக எங்களையும் நீ எழுதுவாயாக என்றே அடியான் இங்கு வேண்டுகின்றான்.

இந்தச் சிந்தனையும் துஆவும் இருந்தால் இறைவசனத்தின் உயர்வான தரத்தை பெறுவதற்கான முயற்சியும் அத்துடன் இருக்கும். ஒரு தொழுகைக்கு பிறகு அடுத்த தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்ற கவலையும் இருக்கும். ஒரு மூமின் ஒரு தொழுகைக்கு பிறகு அடுத்த தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்ற கவலையில் இருப்பார் என ஹதீஸில் இருப்பார்.

ஒரு ஜும்ஆவிற்கு பிறகு இன்னொரு ஜும்ஆவை நிறைவேற்ற வேண்டும் என்ற கவலை இருக்கும். ஒரு ரமலான் கழிந்த பிறகு அடுத்த ரமலான் பற்றிய கவலை இருக்க வேண்டும். அதன் மூலம் இறைவசனத்தின் உரிமையை அவர் செலுத்த முடியும். பிறகு உயர்வான நல்லொழுக்கத்தை பெறுவதற்கான முயற்சியும் இருக்கும். இதுதான் இறையடியார் என்ற நிலையில் ஒருவர் பெற வேண்டிய உயர்வான தரத்திற்குரிய முயற்சியாகும். இந்த துஆ நமது தலைமுறை, நமது குடும்பம், நமது ஜமாஅத்திற்காகவும் உள்ள துஆவாக இருக்கின்றது. அதன் மூலமாக எல்லோரது உணர்வுகளும் ஒரே திசையில் செல்லக்கூடியதாக இருக்கும். அதன் மூலம் அது அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்க கூடியதாக இருக்கும். அதன் மூலம் ஒருவர் மற்றவரது உரிமைகளை செலுத்தக்கூடியவராக இருப்பார் என்பதை விளக்கியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இங்கு இன்னொன்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது என்னவென்றால், அடியான் இறைவனிடம் எங்கள் இறைவா வணங்குவதற்காக நாங்கள் உன்னை மட்டுமே வைத்துள்ளோம். உன்னைத் தவிர எவையெல்லாம் இருக்கின்றனவோ அவற்றிற்கு எதிரில் நாங்கள் உனக்கே முன்னுரிமை வழங்கியுள்ளோம். நாங்கள் உன்னைத் தவிர வேறு எந்தப் பொருளையும் வணங்குவதில்லை. நீ தனித்தவனாகவும், ஏகனாகவும் இருக்கின்றாய் என்பதை ஏற்றுக் கொள்பவர்களாக நாங்கள் இருக்கின்றோம். இந்த இடத்தில் நாங்கள் என்று கூறி உன்னேயே நாங்கள் வணங்குகின்றோம் என்று கூறுவதன் மூலம் இந்த துஆவை இறைவன் எல்லா சகோதரர்களுக்காகவும் செய்யும்படி கூறுகின்றான். துஆ செய்கின்றவர் தனக்காக மட்டும் துஆ செய்யவில்லை என்பதை எடுத்துக்கூறி இதில் அல்லாஹ் முஸ்லிம்கள் ஒருவொருக்கொருவர் நல்ல முறையில் பரிமாற வேண்டும் என்றும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்றும் நட்பைப் பேண வேண்டும் என்றும் ஆர்வமூட்டுகின்றான். துஆ செய்கின்றவர் தனது சகோதரருக்காக நல்லதை நாடியவாறு தனக்காக நல்லதை நாடும்போது அதற்காக தன்னை வருத்திக் கொள்வது போன்று தனது சகோதரரது நலனுக்காகவும் தன்னைாட துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மனிதன் இந்த துஆவை செய்யும்போது மற்றவர்களது உரிமைகளைச் செலுத்துவதன் பக்கம் அவருக்கு கவனம் ஏற்படும். இறைவனது அடியாருக்குரிய உரிமையை நான் செலுத்த வேண்டுமென்றால் என்னுடைய உரிமைகளைப் பெறுவதற்காக இந்த துஆவை நான் செய்யும்போது அல்லது எனது ஆன்மீக முன்னேற்றுத்திற்காக இந்த துஆவை நான் செய்யும்போது அத்துடன் எனது சகோதரருக்காகவும் நான் அதையே சிந்திக்கக் கூடியவனாக இருப்பேன். இந்த சிந்தனை உருவாகிவிட்டால், அதன் மூலமாக ஒரு அழகிய சமுதாயம் உருவாகும். பிறரது உரிமைகளையும் பறிப்பது என்ற கேள்விக்கே இடமில்லாமல் போய் விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தனது தேவையை நிறைவேற்றுவதற்கு எந்த அளவு நிம்மதியின்மையும் அமைதியின்மையும் அவரிடம் காணப்படுமோ அதே கவலை தனது சகோதரரின் தேவையை நிறைவு செய்யும் வரை அவரிடம் நிம்மதியின்மையும் அமைதியின்மையும் இருக்கும். மேலும் அவர் தனக்கும் தனது சகோதரருக்கும் இடையில் எந்த வித்தியாசத்தையும் காணமாட்டார். முழுமையான உள்ளத்துடன் அவருக்காக நன்மையை நாடுபவராக ஆகிவிடுவார்.

அல்லாஹ் வலியுறுத்திக் கட்டளையிட்டவாறு என் அடியார்களே! சகோதரர்களும் ஒருவருக்கொருவர் நேசமுள்ளவர்களாக இருப்பவர்களும் தங்களுக்கிடையே அன்பளிப்புகளை வழங்கிச் சொல்வது போல் நீங்கள் துஆவின் அன்பளிப்பை வழங்குங்கள் என்று கூறுகின்றான்.

உன்னையே நாங்கள் வணங்குகின்றோம். உன்னிடமே நாங்கள் உதவி தேடுகின்றோம் என்று கூறி மற்றவர்களையும் தங்களுடன் இணைத்துக் கொள்வது தங்களது சகோதரர்களுக்காக வழங்கப்படும் துஆவின் அன்பளிப்பாகும்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நீங்கள் துஆவின் அன்பளிப்பை வழங்குங்கள். அவர்களையும் உங்களுடன் சேர்த்துக் கொள்வதற்காக உங்களது துஆவின் வட்டத்தை விரிவானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களது எண்ணங்களிலும் விரிவான நிலையை ஏற்படுத்துங்கள். உங்களது நல்ல எண்ணங்களில் உங்கள் சகோதரருக்கும் இடமளியுங்கள். ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்வதில் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் போன்றும், தந்தையர் போன்றும் மகன்கள் போன்றும் ஆகிவிடுங்கள்.

**தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த துஆவில் திட்டம் மற்றும் துஆ ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. மூஃமின் திட்டம், துஆ ஆகிய இரண்டையும் பயன்படுத்துவார். ஏனென்றால், திட்டம் இல்லாமல் துஆ ஒன்றுமற்றதாக ஆகிவிடுகின்றது. அவ்வாறே துஆ இல்லாமல் திட்டம் மட்டும் இருந்தால் அதுவும் ஒன்றுமற்றதாக ஆகிவிடுகின்றது. திட்டத்தையும் துஆவையும் ஒன்று சேர்த்து விடுவதுதான் இஸ்லாமாகும். இதற்காகவே நான் பாவங்களிலிருந்தும் கவனக்குறைவுகளிலிருந்தும் தப்பிப்பதற்காக திட்டங்களை தீட்டுவதற்குரிய உரிமையை முழுமையாக செலுத்தியவாறு திட்டமிட வேண்டும் என்று கூறுகின்றேன். அவ்வாறே துஆவுக்குரிய உரிமையை முழுமையாக நிறைவேற்றியவாறு துஆ செய்யுங்கள் என்று கூறுகின்றேன். இதன் காரணமாகவே திருக்குர்ஆனின் முதலாவது சூராவிலேயே இந்த இரண்டு வி-யங்களையும் கருத்தில் கொண்டவாறு இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்று இறைவன் கூறியுள்ளான். இய்யாக நஃபுது என்பதில் அந்த அடிப்படையான திட்டம் பற்றிதான் கூறப்பட்டுள்ளது. மேலும் அதற்கு முதன்மை வழங்கப்பட்டிருக்கின்றது. அதாவது முதலாவதாக மனிதன் காரணிகளைப் பயன்படுத்தியவாறு திட்டமிடுதலுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். ஆனால் அத்துடன் துஆவின் அம்சத்தையும் கைவிட்டு விடக்கூடாது. மாறாக, திட்டம் தீட்டுவதுடன் துஆவையும் கண்முன் நிறுத்த வேண்டும். மூஃமின் இய்யாக்க நஃபுது என்று கூறும் போது அதாவது உன்னையே நாங்கள் வணங்குகின்றோம் என்று கூறியவுடன் நான் எம்மாத்திரம்? இறைவனை வணங்குவதற்கு என்னிடம் என்ன தகுதி இருக்கின்றது? அவனது அருளும் கருணையும் இல்லையென்றால் அவனை நான் வணங்க முடியாது என்றும் எண்ணுகின்றான். எனவேதான் உடனே அவன் இய்யாக்க நஸ்தயீன் அதாவது இதற்கான உதவியையும் நாங்கள் உன்னிடமே வேண்டுகின்றோம் என்று கூறுகின்றான்.

இது மிகவும் நுட்பமான ஒரு வி-யமாகும். இதனை இஸ்லாத்தை தவிர வேறு எந்த மதமும் புரிந்து கொள்ளவில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு மூஃமின் திட்டம், துஆ ஆகிய இரண்டையும் பயன்படுத்துவார். முழுமையாக திட்டம் தீட்டிய பிறகு அந்த வி-யத்தை இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு துஆ செய்கின்றார். திருக்குர்ஆனின் முதலாவது சூராவிலேயே இந்த போதனைதான் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்று இறைவன் கூறுகின்றான். எந்த நபர் தனது ஆற்றல்கள் மூலம் பயனடைவதில்லையோ அவர் தனது ஆற்றல்களை மட்டும் வீணாக்குவதில்லை. தனது ஆற்றல்களை மட்டும் அவமதிப்பதில்லை.

மாறாக, அவர் பாவம் செய்கின்றார். முழுமையான திட்டம் தீட்டாமல் இந்த வி-யத்திற்காக நான் துஆ செய்கின்றேன். துஆவினால் மட்டும் இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று கருதினால் இதுவும் பாவமாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

**தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனிடம் நன்மை செய்வதற்கான எண்ணம் கண்டிப்பாக இருக்கின்றது. இந்த எண்ணத்திற்காக அவனுக்கு இறையுதவி கிடைப்பது மிகவும் அவசியமானதாகும். இதனால்தான் ஐவேளை தொழுகைகளில் சூரா ஃபாத்திஹாவை ஓதும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் இறைவன் அதில் இய்யாக்க நஃபுது என்றும் அதற்கு பிறகு இய்யாக்க நஸ்தயீன் என்றும் கூறுகின்றான். அதாவது உன்னையே நாங்கள் வணங்குகின்றோம். உதவியையும் நாங்கள் உன்னிடமே கேட்கின்றோம். இதில் இரண்டு வி-யங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நஃபுது என்பதில் ஒவ்வொரு நன்மையான பணியிலும் ஆற்றல்கள், நஃபுது திட்டங்கள் முயற்சிகள் ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏனென்றால், எந்த நபர் துஆ மட்டும் செய்துவிட்டு முயற்சிகளை செய்யாமல் இருக்கின்றாரோ அவர் வெற்றிபெற முடியாது. ஒரு விவசாயி விதையை விதைத்துவிட்டு தொடர்ந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லையென்றால் அதன் கனிகளை பெறுவதற்கான எதிர்ப்பார்ப்பையும் நம்பிக்கையையும் அவர் எப்படி வைக்க முடியும்?

விதையை விதைத்துவிட்டு துஆ மட்டும் செய்வதாக இருந்தால் நிச்சயமாக எதுவும் கிடைக்க போவதில்லை என்பது அல்லாஹ்வின் நடைமுறையாகும்.

விவசாயிகளுக்கு தெரியும். விதை விதைத்த பிறகு அதற்கு உரமிட வேண்டும் என்பது அவசியமானதாகும். நீர் பாய்ச்சுவதும் அவசியமானதாகும். களைகளை அகற்றுவதும் அவசியமானதாகும். காட்டு விலங்குகளிடமிருந்து அந்த விதையைப் பாதுகாப்பதும் அவசியமானதாகும். இந்த விதையைப் பாதுகாப்பதும் அவசியமானதாகும். இந்த இயற்கைச் சட்டம் எல்லா இடங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இது எப்படிப்பட்ட விஷயம் என்றால் இதனை எவ்வளவு அழகான முறையில் இஸ்லாம் எடுத்துக் கூறியுள்ளதோ அதுபோன்று வேறு எந்த மதமும் எடுத்துக் கூறவில்லை.

இந்த துஆவை தொடர்ந்து செய்து வர வேண்டும் என்பதன் பக்கம் அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள். ஏனென்றால் துஆ எப்போது ஏற்றுக் கொள்ளப்படும் என்பது தெரியாது. துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் ஒரு நேரம் இருக்கின்றது. அல்லாஹ்வுக்கு நமது எந்த செயல் அப்போது விருப்பமானதாக இருக்கும் என்பது பற்றி நமக்கு தெரியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர்கள் தங்களது இறைவனுக்கு முன்னால் தாழ்மையுடன் துஆ செய்து கொண்டே இருக்கின்றார்களோ மேலும் எனது ஏதாவதொரு பணிவை இறைவன் ஒருவேளை ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதுகின்றாரோ அவருக்கு நிச்சயமாக அல்லாஹ் உதவி செய்கின்றான்.

எனவே பணிவுடனும் தாழ்மையுடனும் துஆ செய்து கொண்டிருப்பதுதான் அடியானின் பணியாகும். அவனிடம் உதவி கேட்டுக் கொண்டே செல்ல வேண்டும்.

**பிரிதோரிடத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்:**

உதவி கேட்பது தொடர்பாக இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது உண்மையில் உதவி செய்வதற்கான உரிமை அல்லாஹ்வுக்கு தான் உள்ளது. இதனை திருக்குர்ஆன் வலுவாக எடுத்துக் கூறியுள்ளது. எனவே தான் அது இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்று கூறுகிறது.

எனவே இந்தக் கருத்தைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும். நிரந்தரமாக தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் இந்த துஆவைச் செய்வதன் மூலம் அவனது உதவியைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு சஹாபி (அவரது பெயர் எனது நினைவில் இல்லை) தொடர்பாக ஒருவர் எழுதுகின்றார்: அந்த சஹாபி நஃபிலான தொழுகையை பள்ளிவாசலில் தொழும் போது 20 அல்லது 25 நிமிடங்கள் வரை நின்று கொண்டிருப்பதை நான் பார்த்தேன். காதியானிலுள்ள மஸ்ஜிது அக்ஸாவில் அவர் தொழுது கொண்டிருந்தார். கை கட்டிய நிலையில் அவர் நின்று கொண்டிருந்தார். மெதுவான அவரது குரல் எனக்கு கேட்டதால் அவருக்குப் பக்கத்தில் சென்று அவர் என்ன கூறுகின்றார் என்று கேட்பதில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. நான் அவருக்குப் பக்கத்தில் சென்று 15 நிமிடங்கள் வரை அவருடன் அங்கேயே அமர்ந்திருந்தேன். அப்போது அந்த சஹாபி தனது மெதுவான குரலில் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்பதை மட்டும் ஓதிக்கொண்டிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நட்பைப் பெற்ற அந்த மக்களுக்கு கிடைத்த இறைஞானம் இதுதான்.

இந்த ஞானத்தையும், அறிவையும் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு மூஃமினும் முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலமாகவே இறை அடியாருக்குரிய உரிமையை நாம் செலுத்த முடியும்.

இறை அடியார் என்ற உரிமையை எப்படி செலுத்த முடியும் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் வசனமான இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்பதில் எல்லா விதமான நற்பாக்கியமும் ரப்புல் ஆலமீனாக இருக்கும் இறைவனின் நற்பண்புகளைப் பின்பற்றுவதன் மூலமே கிடைக்கும். அதாவது அந்தப் பண்புகளை, தான் மேற்கொண்டு நடப்பதன் மூலமாகவே அந்த நற்பாக்கியங்கள் நமக்கு கிடைக்கும்.

அடியான் மீண்டும் மீண்டும் இந்த துஆவை செய்யும் போது அல்லாஹ்வின் நற்பண்புகளை முழுமையாகப் புரிந்து கொண்டு அந்த நற்பண்புகளுக்கு ஏற்ப தானும் செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறு இல்லையென்றால் கிளியைப் போன்று தான் மனனம் செய்த சொற்களை ஒருவர் திரும்பத் திரும்ப கூறுவது போல் இது ஆகி விடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுக்கும் இதுபற்றிய ஞானம் கிடைத்திருந்தது. அவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நட்பில் இருந்தவர்களும் இந்த ஞானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அல்லாஹ்வின் அருளால் இந்த விஷயத்தைப் புரிந்தவர்கள் பலரும் இன்றும் நமது ஜமாஅத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் இந்த வழிமுறைகளைப் பின்பற்றியவாறு துஆ செய்கின்றார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பிறகு இந்த உயர்வான தகுதிகளைப் பெறுவதற்கு பெரும் தடையாக இருப்பது வெளி வேஷமாகும். அது நன்மைகளைத் தின்று விடுகின்றது. மேலும் தற்பெருமையும் கர்வமும் மிகப்பெரும் தீமையாக இருக்கின்றது. மேலும் வழிகேடு நற்பாக்கியத்தின் வழிகளிலிருந்து மனிதனை வெகு தொலைவில் கொண்டு சென்று விடுகிறது. எனவே அல்லாஹ் தனது பலவீனமான அடியானின் மீது கருணை காட்டியவாறு அவன் தவறிழைத்து விடலாம் எனக் கருதி தனது வழியின் பக்கம் முன்னேறி வருபவர்கள் மீது பரிதாபப்பட்டு இந்த அழிக்கின்ற நோய்கள் தொடர்பாக தனது இந்த துஆவில் சுட்டிக் காட்டியுள்ளான். அதற்காக மக்கள் இய்யாக்க நஃபுது என்று கூறும்படி கூறியுள்ளான். அதன் மூலமாக அவர்கள் வெளி வேஷத்தின் நோயிலிருந்தும் விடுபட்டு இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இய்யாக்க நஸ்தயீன் என்று கூறும்படியும் அவன் கட்டளையிட்டுள்ளான். அதன் மூலம் அந்த மனிதன் தற்பெருமை, அகங்காரம் ஆகியவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். பிறகு அவன் இஹ்தினா என்றும் கூறும்படி கட்டளையிட்டுள்ளான். அதன் மூலமாக

அவன் வழிகேடு மற்றும் மனதின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றிச் செல்வதிலிருந்தும் விலகி விடுவான். எனவே இய்யாக்க நஃபுது என்ற அவனது கூற்று மனத்தூய்மை மற்றும் முழுமையான இறை அடியாராக மாறுவது ஆகியவற்றின் பக்கம் அவனுக்கு ஆர்வமூட்டுகிறது. மேலும் இய்யாக்க நஸ்தயீன் என்ற அவனது வசனம் ஆற்றல் உறுதியான பாதங்களுடன் நிலைத்திருப்பது, கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்பது ஆகியவற்றிற்காக உதவி கேட்பதை சுட்டிக் காட்டுகிறது. மேலும் அவனது வசனமான இஹ்தினஸ்ஸிராத் அல்லாஹ்விடமிருந்து அறிவையும், நேர்வழியையும் கேட்டுப் பெற வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இதனை தனது கருணையால் மனிதனை கண்ணியப்படுத்தும் வகையில் அந்த இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ளான்.

எனவே இந்த வசனங்களிலிருந்து நாம் பெறும் கருத்து என்னவென்றால் இறைவனை அடைவதற்காக நாம் மேற்கொள்ளும் அந்த வழிகள் அளவற்ற மனத்தூய்மையுடனும் அளவு கடந்த முயற்சிகளுடனும் நேர்வழியைப் புரிவதற்குரிய முழு தகுதியையும் நான் அவற்றை பெறாத வரை முழுமையடையாது. ஒரு ஊழியரிடம் இந்தப் பண்புகள் இல்லையென்றால் அவர் தொண்டாற்றுவதற்கு தகுதியற்றவராக ஆகி விடுகின்றார்.

எனவே, இறை அடியாராக ஆவதற்கு இந்த உயர்வான தகுதியைப் பெற ஒவ்வொரு மூஃமினும் முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களின் உண்மை நிலையை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

தனது அருளாலும் கருணையாலும் இறைவன் ஏற்றுக் கொள்ளும் இறைவணக்கத்தின் உண்மை, உண்மையில் சில விஷயங்களில் அடங்கியுள்ளது. அதாவது அல்லாஹ்வின் மகிமை, அவனது மிக உயர்ந்த நிலை ஆகியவற்றைப் பார்த்து முழுமையான தாழ்மையைக் கடைபிடிக்க வேண்டும். மேலும் அவனது கருணைகள், அவனது பல்வேறு விதமான அருட்கொடைகளைப் பார்த்து அவனைப் புகழ வேண்டும். அவன் மீது அன்பு கொண்டவாறு, அவனது சிறப்புகளுக்கு எதிரில் செல்வம், வளம் ஆகியவற்றை கற்பனை செய்து பார்த்து அவனது சிறப்புகளுக்கு எல்லா பொருள்களை விடவும் முன்னுரிமை வழங்க வேண்டும். மேலும் அவனது சுவர்க்கத்தை கண் முன் நிறுத்தியவாறு தனது உள்ளத்தை ஷய்த்தானிய சலனங்களிலிருந்து பாதுகாப்பாக வைக்க வேண்டும். இவ்வாறான இறைவணக்கத்தை மேற்கொள்ளும் போதுதான் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்பதன் உண்மையான உருவம் நம் கண் முன்னால் தோன்றும். இதன் மூலமாக மனிதன் ரஹ்மானின் அடியார்கள் என அழைக்கப்படுபவர்களுடன் இணைந்து விடுவான்.

இபாதத் என்பதன் கருத்து என்ன? இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறுகின்றார்கள்:

கருணையுள்ள இறைவன் முதல் சூராவான சூரா ஃபாத்திஹாவில் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற போதனையை வழங்கியுள்ளான். இந்த இடத்தில் இபாதத் என்பதில் இறைவணக்கம், இறைஞானம் ஆகிய இரண்டும் அடங்கும். அதாவது வெளிப்படையான இறைவணக்கமும் தேவை. அந்த இறைவணக்கம் பற்றிய ஞானமும் மனிதனுக்கு தேவையானதாகும். இரண்டிலும் மனிதனின் தாழ்மை வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. அதாவது தாழ்மையையும் பணிவையும் மேற்கொண்டால் இந்த விஷயங்கள் உங்களில் உருவாகி விடும். அல்லது கடைபிடிப்பதன் மூலம் உங்களிடம் பணிவும் தாழ்மையும் ஏற்படும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, நாம் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்று கூறும்போது நமக்கு வெளிப்படையான செயல் அளவிலுள்ள இறைவணக்கமும் அதுபற்றிய ஞானமும் நமக்கு கிடைக்க வேண்டியது அவசியமானதாகும். நான் ஏன் இந்த துஆவை ஓதுகின்றோம்? என்ற ஞானம் இருப்பது அவசியமானதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று முழுமையான பணிவை மேற்கொள்வதன் மூலமே இந்த இறைஞானம் நமக்கு கிடைக்கும்.

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:** மனிதன் இறைவனை வணங்குவதாக வாதம் செய்கின்றான். ஆனால் இறைவனை வணங்குவது என்பது பல சஜ்தாக்களை செய்வதிலும் பல ருகூவுக்களை செய்வது அல்லது பலமுறை நிற்பதன் மூலம் நிறைவேறி விடுமா? அல்லது பலமுறை தஸ்பீஹ் மணிகளை உருட்டுவதன் மூலம் இது நடக்குமா? இதன் மூலம் ஒருவரை நாம் அவர் இறைவனை வணங்கக்கூடியவர் என்று கூறிவிட முடியுமா? இறைவன் மீதுள்ள அன்பு ஒருவரை எந்த அளவு அவன் பக்கம் ஈர்க்க வேண்டுமென்றால் அந்த நபரின் இருப்பு அங்கு இல்லாமல் ஆகி விட வேண்டும். இதுதான் இறைவணக்கமாகும்.

முதலாவதாக, இறைவனின் இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை இருக்க வேண்டும். பிறகு இறைவனின் அழகு மற்றும் அவனது அருட்கொடைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். தனக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு அருட்கொடையும் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கின்றது என்பதை மனிதன் தெரிந்திருக்க வேண்டும்.

பிறகு அவனுடன் அன்பின் தொடர்பு எந்த அளவு இருக்க வேண்டுமென்றால் அன்பின் உணர்வுகள் எப்போதும் நெஞ்சங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மேலும் இந்த நிலை ஒவ்வொரு நொடியிலும் முகத்திலும் வெளிப்பட வேண்டும். இறைவனது மகிமை உள்ளத்தில் எந்த அளவு இருக்க வேண்டுமென்றால் முழு உலகமும் அவனது இருப்பிற்கு எதிரில் மரணித்தவையாக கருதப்பட வேண்டும். ஒவ்வொரு அச்சமும் அவனுடன் தொடர்புடையதாகவே இருக்க வேண்டும். அவனுக்காக சகித்துக் கொள்ளும் வேதனையில் இன்பம் இருக்க வேண்டும். அவனை தனிமையாக சந்திப்பதில்தான் சுகம் இருக்க வேண்டும். அவனைத் தவிர உள்ளத்திற்கு வேறு எவர் மூலமும் அமைதி கிடைக்க முடியாது என்ற நிலை இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலை உருவாகி விட்டால் அதற்கு தான் இறைவணக்கம் என்று பெயர். ஆனால் இத்தகு நிலைமை இறைவனின் குறிப்பான உதவி இல்லாமல் எவ்வாறு உருவாக முடியும்? நஸ்தயீன் என்ற துஆவைக் கற்றுத் தந்துள்ளான். அதாவது நாங்கள் உன்னையே வணங்கினாலும் வணங்குவதற்கான உரிமையை நாங்கள் எங்கு நிறைவேற்றியுள்ளோம்? உன்னிடமிருந்து இதற்காக குறிப்பாக உதவி கிடைக்காமல் இது சாத்தியமற்றதாகும். தனது உண்மையான வணக்கத்திற்குரியவனாக இறைவனை ஆக்கிக் கொண்டு அவனை வணங்குவது தான் வலாயத் அதாவது இறைநேசமாகும். இதற்கு மேல் எந்தத் தகுதியும் கிடையாது. ஆனால் இந்தத் தகுதி இறைவனின் உதவி இல்லாமல் ஒருவருக்கு கிடைக்க முடியாது. அதைப் பெற்றுக் கொண்டதற்கான அடையாளம் என்னவென்றால் இறைவனது மகிமை உள்ளத்தில் அமர்ந்து விட வேண்டும். இறைவனது அன்பு உள்ளத்தில் அமர்ந்து விட வேண்டும். உள்ளம் அதன் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும். அவனையே விரும்ப வேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் எதிரில் அவனையே தேர்ந்தெடுக்க வேண்டும். தனது வாழ்வின் நோக்கமே அவனை நினைவு கூர்வதுதான் என்று இருக்க வேண்டும்.

**பிறகு இபாதத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளின் சுருக்கத்தை அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இபாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கான சுருக்கமான கருத்து உண்மையில் இதுவேயாகும். அதாவது மனிதன் இறைவனைப் பார்ப்பது போல் அவன் முன்னால் நிற்க வேண்டும். அல்லது இறைவன் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற நிலை உருவாக வேண்டும். எல்லா விதமான கலப்படத்திலிருந்தும் ஷிர்க்கிலிருந்தும் தூய்மை அடைய வேண்டும். அவனது மகிமை மற்றும் அவனது காத்தோம்பும் பண்பு ஆகியவற்றையே கருத்தில் கொள்ள வேண்டும். சுன்னத்தான துஆக்களையும் ஏனைய துஆக்களையும் இறைவனிடம் கேட்க வேண்டும். மிகவும் அதிகமாக தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் தனது பலவீனங்களை வெளிப்படுத்திக் கூற வேண்டும். அதன் மூலம் நஃப்ஸ் தூய்மை அடைந்து விடும். இறைவனுடன் உறுதியான தொடர்பு ஏற்பட்டு விடும். மேலும் அவன் மீதுள்ள அன்பில் தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும். இதுவே முழு தொழுகையின் சுருக்கமாகும். இவை அனைத்தும் சூரா ஃபாத்திஹாவிலேயே வந்து விடுகின்றது.

பாருங்கள். இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்பதில் நமது பலவீனங்கள் வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. உதவிக்காக இறைவனிடமே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இறைவனிடமிருந்தே உதவி கோரப்பட்டுள்ளது. இதற்குப் பிறகு நபிமார்கள், ரஸூல்மார்கள் ஆகியவர்களின் பாதையில் நடப்பதற்காக துஆ கேட்கப்பட்டுள்ளது. நபிமார்கள் மூலமும் ரஸூல்மார்கள் மூலமும் இந்த உலகில் வெளிப்பட்டுள்ள அருட்கொடைகள் தமக்கு கிடைப்பதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அவை அவர்களைப் பின்பற்றுவதன் மூலமும் அவர்களது வழிமுறைகளைப் பின்பற்றிச் செல்வதன் மூலமாகவும் கிடைக்க முடியும். பிறகு இறைவனிடம் உனது ரஸூல்மார்களையும் நபிமார்களையும் மறுத்து இறுமாப்புடனும் தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடனும் செயல்பட்டதனால் இந்த உலகிலேயே எவர் மீது இறை கோபம் இறங்கியதோ அல்லது எவர்கள் உலகத்தையே தங்களது நோக்கமாக கொண்டு நேர்வழியை கைவிட்டு விட்டார்களோ அத்தகையவர்களது பாதையில் செல்வதிலிருந்தும் எங்களை பாதுகாப்பாயாக என்று நாம் துஆ செய்யுமாறு கூறப்பட்டிருக்கின்றது.

பாவங்கள் மீது வெறுப்படைவது ஒரு மிகப்பெரும் அருளாகும். இது எப்படி கிடைக்கும்? இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாவங்கள் மீது வெறுப்பு ஏற்படுவதை விட மனிதனுக்கு வேறு எந்த பெரிய அருளும் இருக்க முடியாது. இறைவன் தாமாகவே அவரை பாவங்களிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். ஆனால் இந்த விஷயம் திட்டங்கள் மூலமாக மட்டும் அல்லது துஆக்கள் மூலமாக மட்டும் கிடைக்காது. மாறாக இரண்டையும் சேர்த்து செய்வதன் மூலமே அது கிடைக்கும். இதைப் பற்றி இறைவன் நமக்கு இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற போதனையை வழங்கியுள்ளான்.

இதன் பொருள் என்னவென்றால் எந்த ஆற்றல்களை இறைவன் மனிதனுக்கு வழங்கியிருக்கின்றானோ அவற்றை முழுமையாக பயன்படுத்தி பிறகு அதன் முடிவை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். அடியான் இறைவனிடம் இறைவா! நீ எனக்கு வழங்கியுள்ள நல்வாய்ப்பிற்கு ஏற்ப நான் பணி செய்து விட்டேன். இதுதான் இய்யாக்க நஃபுது என்பதன் பொருளாகும். பிறகு இய்யாக்க நஸ்தயீன் என்று கூறி இறைவனிடம் அவர் உதவி கேட்கின்றார். மற்ற படித்தரங்களைக் கடந்து செல்வதற்கு நான் உன்னிடம் உதவி கேட்கின்றேன். இறைவன் வழங்கியுள்ள ஆற்றல்களை பயன்படுத்தாமல் துஆ மூலமாக மட்டும் உதவியை வேண்டுபவர் மிகப்பெரும் அறிவிலியாக இருக்கின்றான். அவனால் வெற்றியின் முகத்தை எப்படிப் பார்க்க முடியும்? துஆ, முயற்சிகள் ஆகியவற்றால் உதவி கேட்பவரின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**பிறகு கூறுகின்றார்கள்:**

முயற்சிகள் செய்வதுடன் துஆக்களையும் செய்பவருக்கு அதற்குப் பிறகு ஏதாவது தடுமாற்றம் ஏற்பட்டாலும் பிறகு இறைவன் அவரைக் காப்பாற்றுகின்றான்.

தவறுகள், பலவீனங்கள், பாவங்கள் ஆகியவற்றிலிருந்து இத்தகையவரை அல்லாஹ் காப்பாற்றுகின்றான்.

தன் தரப்பிலிருந்தும் முழுமையாக முயற்சி செய்து பிறகு துஆவும் செய்தால் அப்படிப்பட்டவர்களுக்கு பாவங்கள் மீது வெறுப்பை இறைவன் ஏற்படுத்துவதுடன் அந்த பாவங்களின் தீய விளைவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் செய்கின்றான்.

பிறகு இறைவனின் பண்புகளாகிய அல் ஹய்யூ அல் கய்யூம் ஆகியவற்றை இய்யக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற வசனத்துடன் இணைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் அல்லாஹ் தனது இரண்டு பெயர்களை எடுத்துக் கூறியிருப்பதை நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவை அல்ஹய்யூ மற்றும் அல் கய்யூம் ஆகும். அல் ஹை என்பதன் பொருள் இறைவன் உயிரோடு இருக்கின்றான். மற்றவர்களுக்கு அவன் உயிரை வழங்கக்கூடியவனாக இருக்கின்றான். அல் கய்யூம் என்றால் தானே நிலைத்திருப்பதுடன் பிறர் நிலைத்திருப்பதற்கான அடிப்படை காரணமாக திகழ்பவன் என்பதாகும். ஒவ்வொரு பொருளின் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான நிலைநிற்றலும் அதன் வாழ்க்கையும் இந்த இரண்டு பண்புகள் மூலமே நடக்கின்றது.

எனவே அல்ஹை என்ற சொல் அவனை வணங்குவதை வேண்டுகிறது. அதன் தோற்றம் சூரா ஃபாத்திஹாவில் இய்யாக்க நஃபுது என்ற சொற்களில் அடங்கியுள்ளது. அல் கய்யூம் என்பது அவனிடம் பாதுகாப்பை வேண்டுகின்றது. இது இய்யாக்க நஸ்தயீன் என்ற சொற்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே உலகப் பிரச்சனைகள், உலகரீதியான முன்னேற்றங்களாலும் சரி அல்லது ஆன்மீக ரீதியான முன்னேற்றங்களாலும் சரி அல்லாஹ்வின் உண்மையான அடியாராக ஆவதன் மூலமாகத்தான் மனிதன் இவற்றிற்கான தீர்வை காண முடியும். அதன் மூலமாகத்தான் அருள்களைப் பெற முடியும். இதன் மூலமாகவே உலகம் மற்றும் மறுமையின் அருட்கொடைகளுக்கு அவர் வாரிசாக முடியும்.

இதற்கு முன்னர் கூறியதைப் போன்று இறைவனது ரஹ்மான் என்ற பண்பிலிருந்து பலன் பெற்றதற்கு இறைவனுக்கு நன்றி கூறுவது மனிதனுக்கு இறைவனை வணங்குவதன் பக்கம் ஆர்வமூட்டுகின்றது. மேலும் இறைவனது ரஹீம் என்ற பண்பை அது வேண்டுகிறது. இந்த வேண்டுதலே இறை உதவியைக் கோருவதாகும்.

**தொழுகை இறைவணக்கத்தின் சத்தாக இருப்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

மனிதன் ஐவேளை தொழுகைகளையும் முறையாக அதன் ஆரம்ப நேரங்களில் நிறைவேற்றுவதுடன் கடமையான தொழுகைகள், சுன்னத்தான தொழுகைகள் ஆகியவற்றை தொழுவதை நிரந்தரமாக செய்து வருவதுடன் மனதை ஒருநிலைப் படுத்தியவாறு ஆர்வத்துடனும் இன்பத்துடனும் இறைவணக்கத்தின் அருள்களைப் பெறுவதற்கு முழுமையாக முயற்சி செய்து வர வேண்டும். தொழுகை எப்படிப்பட்ட சவாரியாக இருக்கின்றதென்றால் அது அடியானை மேலே இருக்கும் உலகத்தின் இறைவன் வரை கொண்டு செல்கிறது. இதன் மூலமாக மனிதன் எத்தகு உயர் தகுதியை பெறுகின்றான் என்றால் அப்படிப்பட்ட உயர்வான நிலையை குதிரைகளின் முதுகுகளில் அமர்ந்து மனிதனால் அடைய முடியாது.

தொழுகையின் கனிகளை அம்புகளால் பெற முடியாது. இதன் இரகசியத்தை சொற்களால் வெளிப்படுத்திக் கூறவும் முடியாது. ஆனால் எவர் இந்த வழிமுறைகளை உறுதியாகப் பற்றிப்பிடித்துக் கொண்டார்களோ அவர் உண்மையைப் பெற்றுக் கொண்டார். மேலும் திரை மறைவில் இருக்கும் அந்த அன்பன் வரை சென்று விடுகின்றார்.

அவரது பகல் ஒளிமயமானதாகவும் அவரது கூற்றுக்கள் முத்துக்கள் போன்றும் இருப்பதை நீர் காண்கின்றீர். அவரது முகம் பதினாலாவது இரவில் தோன்றும் நிலவாக காட்சி அளிக்கும். அவரது தங்குமிடம் நெஞ்சங்களாக இருக்கும். எவர் தொழுகையில் பணிவோடு குனிகின்றாரோ அல்லாஹ் அவருக்காக அவர் முன்னிலையில் அரசர்களைக் குனிய வைக்கின்றான். மற்றவர்களது ஆட்சி மற்றும் அதிகாரத்தின் கீழ் இருந்த மனிதரை அவன் எஜமானராக ஆக்கி விடுகின்றான்.

இதுவும் இஃஜாஸுல் மஸீஹ் என்ற அவர்களது அரபி நூலின் மொழியாக்கமாகும்.

தொழுகை மிகச்சிறந்த இபாதத் ஆகும். அடியானை அது இறைவனுக்கு அருகில் கொண்டு செல்கிறது. ஆனால் சிலரது தொழுகைகளை இறைவன் ஏற்றுக் கொள்ள வில்லை என்பதை இறைவனே கூறியுள்ளான். ஏனென்றால் தொழுகைக்குரிய உரிமையை அவர்கள் முழுமையாக செலுத்தவில்லை. தொழுகையினால்

கிடைக்கும் இன்பமும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

சிலர் எங்களுக்கு தொழுகைகளில் இன்பம் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் நான் அவர்களுக்கு கூறுவது என்னவென்றால் அவர்கள் பலமுறை மீண்டும் மீண்டும் தொழ வேண்டும். தக்வாவின் ஆரம்பப் படித்தரத்தில் இறுக்கம் ஏற்படுவது ஆரம்பமாகி விடுகிறது. அப்போது இறைவனிடம் இய்யாக்க நஃபுது வஇய்யாக நஸ்தயீன் என்று மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும். ஷய்த்தான் கஷ்ஃபின் நிலையில் திருடனாகவும் கொள்ளைக்காரனாகவும் தோற்றமளிக்கின்றான். அவனைப் பற்றிய முறையீட்டை இறைவனிடம் செய்ய வேண்டும். இந்த கொள்ளைக்காரன் வழியில் நிற்கின்றான். எனவே உனது கைகளின் ஆதரவை நான் வேண்டுகின்றேன் என்று கூறியவாறு யார் அல்லாஹ்விடம் முறையீடு செய்து அவனது உதவியைக் கோரியவாறு ஷய்த்தானுக்கு எதிராக அவனிடம் துஆ கேட்பதில் மூழ்கிவிடுகின்றாரோ அவர் ஆற்றலையும் சக்தியையும் பெறுவார். அதன் மூலமாக ஷய்த்தான் அழிந்து விடுகின்றான். ஆனால் இந்த ஆற்றலைப் பெறுவதற்கும் தனது முறையீட்டை இறைவனிடம் எடுத்து வைப்பதற்கும் ஒரு உருக்கமும் உண்மையும் தேவைப்படுகின்றது. அது இந்த திருடனை கற்பனை செய்து பார்ப்பதன் மூலம் பிறக்கின்றது.

உண்மையான முறையில் இறைவன் பக்கம் குனிவதும் இந்த உருக்கத்தைப் பெறுவதும் எப்படி சாத்தியாகும் என்றால் ஷய்த்தான் திருடனைப் போல் என்னைப் பின்தொடர்ந்து வருகின்றான் என்பதை கற்பனை செய்து பார்க்கும் போதுதான் இந்த நிலை உருவாகும்.

அந்த ஷய்த்தான் நம்மை நிர்வாணமாக ஆக்குவதற்கு முயற்சிகளைச் செய்கின்றான். ஆதமிற்கு ஏற்பட்டது போன்ற சோதனையை அவன் கொண்டு வர விரும்புகின்றான். இந்த கற்பனையின் விளைவாக ஆன்மா கதறியவாறு இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்று குரல் எழுப்பும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகைகளில் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்பதை அதிகமாக மீண்டும் மீண்டும் ஓத வேண்டும். இய்யாக்க நஸ்தயீன் இறைவனது அருளையும் தொலைந்து போன பொருள்களையும் மீண்டும் கொண்டு வருகின்றது.

அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்தக் கூற்றுக்களை நமது வாழ்வின் ஒரு அங்கமாக ஆக்குவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இறைவனது உதவியை ஒவ்வொரு நொடியிலும் பெறக்கூடிய நல்லடியார்களில் நம்மை இணைப்பானாக. அல்லாஹ் நம்மை அவனது அடைக்கலத்தின் கீழ் வைப்பானாக. இந்த ரமலானிலிருந்து நாம் முழுமையாக பயனடைபவர்களாக இருப்போமாக.

எஞ்சியிருக்கின்ற இந்த நாட்களில் குறிப்பாக அதிகமாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 19.08.2011**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**